செ.வெ.எண்: 116/2017 நாள்: 15.02.2017

## பத்திரிக்கை செய்தி

தமிழகத்தில் உள்ள நீர்நிலைகள், பாசன வாய்க்கால்கள், சாலையோரங்கள் மற்றும் தனியார் நிலங்களில் இயற்கையாகவே வளர்ந்து வரும் சீமைக்கருவேல் மரங்கள் சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிப்பதாகவும், அவற்றை அகற்றிட அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தாக்கல் செய்த வழக்கு W.P.16485/2015, 16645/2015 ஆகிய தீர்ப்புரையில் 10.02.17-ம் நாள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் பின்வருமாறு ஆலோசனைகள் வழங்கியுள்ளது. 1) அரசு நிலங்களில் உள்ள சீமைக்கருவேல் மரங்களை அகற்றிட சம்பந்தப்பட்ட துறைகள் நடவடிக்கை மேற்கொண்டு சீமைக்கருவேல் மரங்களை 15 தினங்களுக்குள் வேருடன் அகற்றிட வேண்டும். இம்மரங்கள் தானாகவே வளரக் கூடியவை என்பதாலும், சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கக் கூடியது என்பதாலும், சுகாதார பாதிப்புகள் உண்டாக்குவதாலும் பட்டாதாரர்கள் தங்கள் நிலங்களில் வளரும் சீமைக்கருவேல் மரங்களை வேரூடன் அகற்றிட வேண்டும் எனவும் பொது மக்களுக்கு இதனை விளம்பரப்படுத்துமாறும் தெரிவித்துள்ளது.

எனவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பட்டாதாரர்கள் அவர்களுடைய நிலங்களில் சீமைக்கருவேல் மரங்கள் வளர்ந்திருந்தால், 24.02.17-ம் தேதிக்குள் அவற்றை வேருடன் வெட்டி அப்புறப்படுத்துமாறும், இம்மரங்களை வளர்ப்பதற்கு அரசு ஆதரவு ஏதும் இல்லையெனவும் சுற்றுச்சூழல் பாதிப்புகளை தடுக்கவும், நில உடமைதாரர்கள் இப்பணியை உடனே மேற்கொள்ளுமாறும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டுக்கொள்கிறார்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.